BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்டன் நகரம் ஆரோக்கியமான சமூகங்களுக்கான, ஷெரிடான் -இன் புதிய மையத்திற்காக $2.5 மில்லியன் தொகையை, ப்ராம்ப்ட்டனில் ஆரோக்கிய பராமரிப்புடன் கூடிய வலுவான எதிர்காலத்திற்காக, தொடர்ந்து முதலீடு செய்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 7, 2022) –ப்ராம்ப்ட்டன் நகரம், உள்ளூர் மக்களின் சுகாதாரப் பாதுகாப்புடன் கூடிய வலுவான எதிர்காலத்திற்காக, தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது; ஷெரிடன் கல்லூரியின் ஆரோக்கியமான சமூகங்களுக்கான புதிய மையம் அமைப்பதில் ஆதரவளிக்க, ப்ராம்ப்ட்டன் நகர சபை $2.5 மில்லியன் நிதியுதவிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

நாள்பட்ட நோய்களுடன் வாழும் மக்களுக்கு இன்னும் சிறந்த கவனிப்பை வழங்குவதற்கும், பீல் பிராந்தியத்தில் மருத்துவ நிபுணர்களுக்கான இன்னும் அதிகமான தேவையை நிரப்புவதற்கும், ஆரோக்கியமான சமூகங்களுக்கான மையம் செய்யவிருப்பவை:

- ப்ராம்ப்ட்டன் நகரம், பீல் பிராந்தியம் மற்றும் ஒன்ட்டாரியோ மாகாணத்தில் உள்ள மக்களைக் கவனித்துக் கொள்ள, அடுத்த தலைமுறை செவிலியர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார நிபுணர்களுக்கு ப்ராம்ப்ட்டனில் பயிற்சி அளித்தல்; மற்றும் கலாச்சார ரீதியாக திறமையான கவனிப்புக்கான பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளித்தல்.
- மாணவர்கள், கல்வியாளர்கள், மருத்துவ வல்லுநர்கள், தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர்கள், சமூக சேவையாற்றுபவர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் ஆகியோருக்கு இடையேயான புதுமை படைத்தல் மற்றும் கூட்டாண்மைகளுக்கான ஆய்வகமாக இருத்தல்.
- பரஸ்பர தொழில் ரீதியான, முன்கூட்டிய தடுப்புக்கான அக்கறை செலுத்துவதன் மூலம் நாள்பட்ட நோய் மேலாண்மையை நிவர்த்தி செய்வதன் மூலம் ஹால்வே சுகாதார பராமரிப்புக்கு உதவுதல்.
- கட்டுமானம், பராமரிப்பு, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம், தொழில் கூட்டாண்மை மற்றும் அப்பகுதிக்கான மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து இணைப்புகள்

ஆகியவற்றில் கணிக்கப்பட்ட 200 முதல் 500 புதிய வேலைவாய்ப்புக்கள் மூலம் உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் பொருளாதார வளர்ச்சியை உந்தி தள்ளுதல்.

- கிளினிக்கல் கினீசியாலஜி, ஒழுங்குமுறை காரியங்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி ஆகியவற்றில் பட்டதாரி சான்றிதழ் கல்வியைச் சேர்ப்பதன் மூலம் ப்ராம்ப்ட்டனில் பள்ளிக் கல்விக்கு அடுத்த நிலைக்கான விருப்பத் தெரிவுகளை அதிகரித்தல்; இதில் மாகாண அனுமதிக்கென நிலுவையில் உள்ள, இளங்கலை நர்சிங் மற்றும் ஆஸ்டியோபதி ஆகியவையும் அடங்கும்.

நகரத்தின் நிதியுதவியானது. ஷெரிடனின் $20 மில்லியன் முதலீட்டுக்கு நிகராக நிறைவு செய்கிறது மற்றும் ப்ராம்ப்ட்டனில் உள்ள டேவிஸ் வளாகத்தில் ஒரு புதிய கட்டிடத்திற்கான திட்டமிடல் மற்றும் ஆலோசனைக்கு ஆதரவு தருகிறது. புதிய நிகழ்ச்சி நிரலாக்கங்களில் சில 2022 ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் தொடங்கும்; மீதமுள்ளவை நிலுவையில் உள்ள ஒப்புதல்கள் கிடைப்பதன் பேரில் மற்றும் புதிய இடங்கள் உருவக்குதலின் பேரில் கிடைக்கும்.

**ப்ராம்ப்ட்டனுக்கான நியாயமான பேரம்**

ஜனவரி 22, 2020 அன்று, ப்ராம்ப்ட்டன் நகரம் சுகாதாரப் பராமரிப்புக்கான அவசரநிலையை அறிவித்து, ப்ராம்ப்ட்டனின் உடல்நலப் பாதுகாப்பு நிதியளவில் இருந்த இடைவெளியை நிரப்பக் கோரி, அதை குறைக்க மாகாணத்திடம், "**ப்ராம்ப்ட்டனுக்கான நியாயமான பேரம்**" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது. ப்ராம்ப்ட்டனில் உள்ள சுகாதார அவசரநிலையை நிவர்த்தி செய்வதற்கும் அடுத்த தலைமுறை சுகாதாரப் பயிற்சியாளர்கள் நகரத்தில் உள்ளூரிலேயே பயிற்சி பெறுவதை உறுதி செய்வதற்கும் நகரம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**ப்ராம்ப்ட்டனுக்கான நியாயமான பேரம்** பிரச்சாரம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: Brampton.ca.

**விரைவான கூற்றுகள்**

- மார்ச் 2021 இல், ஒருங்கிணைந்த உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான ஆஸ்லரின் பீல் நினைவு மையத்தை ஒரு புதிய மருத்துவமனையாக விரிவுபடுத்துவதற்கு நிதி வழங்குகின்ற மாகாண அரசாங்கத்தின் பட்ஜெட் அறிவிப்பை நகரம் வரவேற்றது.
- 2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் ஒரு பகுதியாக, புதிய பீல் நினைவு மருத்துவமனைக்கான உள்ளூர் பங்கிற்கு $62.5M நிதியை ஒதுக்கீடு செய்வதன் மூலம், சுகாதாரப் பாதுகாப்பு விரிவாக்கத்திற்காக, தான் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை நகரம் வெளிப்படுத்தியது. ஏப்ரல் மாதத்தில், இந்த உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்பவும்,

சுகாதாரப் பாதுகாப்பு விரிவாக்கத்தை ஆதரிக்கவும் ஒரு சதவீத மருத்துவமனை வரிவிதிப்புக்கு நகர நிர்வாகம் ஒப்புதல் அளித்தது.

- மார்ச் 2022 இல், ஒன்ட்டாரியோ அரசாங்கம், ப்ராம்ப்ட்டனில் உள்ள ரையர்சன் யுனிவர்சிட்டி ஸ்கூல் ஆஃப் மெடிசின் 2025 இல் திறக்கப்படவிருக்கும்போது, 80 இளங்கலை இடங்கள் மற்றும் 95 முதுகலை நிலைகளைச் சேர்ப்பது உட்பட, வலிமையான, மிகவும் உறுதியான சுகாதார அமைப்பை உருவாக்க மருத்துவப் பள்ளிக் கல்வியை விரிவுபடுத்துவதாக அறிவித்தது. ஜூலை 2021 இல், அந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒன்ட்டாரியோ மாகாணம் முதலீடு செய்த நிதியுதவியைக் கொண்டு, நகரத்தில் எதிர்கால மருத்துவப் பள்ளிக்கு நிதியளிப்பதற்காக $1 மில்லியன் திட்டமிடல் மானியத்திற்கு ஆதரவாக ப்ராம்ப்ட்டன் நகர சபை வாக்களித்தது. ப்ராம்ப்ட்டனில் ஒரு மருத்துவப் பள்ளியை நிறுவுவது, நகரத்தின் தற்போதைய வாதிடும் பணிகளில் குறிப்பிடத்தக்க பகுதியாகும், மேலும் இது நகரத்தின் 2022 ஒன்ட்டாரியோ பட்ஜெட்-க்கு முந்தைய சமர்ப்பிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ஏப்ரல் 2022 இல், ஆஸ்லரின் பீல் நினைவு மையத்தை 24/7 அவசர சிகிச்சைப் பிரிவைக் கொண்ட ஒரு புதிய உள்நோயாளி மருத்துவமனையாக மாற்றுவதற்கும் ப்ராம்ப்ட்டன் சிவிக் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துவதற்கும் $21 மில்லியனை முதலீடு செய்வதாக மாகாணம் அறிவித்தது.

**அறிஞர் கூற்றுக்கள்**

" உள்ளூர் திறமைகளை வளர்ப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை உருவாக்கி, நமது குடியிருப்பாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நமது உள்ளூர் சுகாதார அமைப்பை வலுப்படுத்தவும் ப்ராம்ப்ட்டன் நகரம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான சமூகங்களுக்கென அமையவிருக்கும் ஷெரிடன் கல்லூரியின் புதிய மையத்திற்கான இந்த அர்ப்பணிப்பானது, நமது குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு கிடைப்பதை மேம்படுத்துவதோடு, உள்நாட்டில் நிலையான பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தவும், வேலைவாய்ப்புக்கள் மற்றும் திறமைகளை ஈர்க்கவும் உதவுகிறது; இதில் ப்ராம்ட்டனில் உள்ள ஷெரிடன் வளாகத்தில் மட்டுமே 200 முதல் 500 வரையிலான முழுநேர வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள், வளர்ந்து வரும் அவர்களின் இந்த நகரத்திலேயே உலகத் தரம் வாய்ந்த சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் அதற்கான கல்வியைப் பெற தகுதியானவர்கள் ஆவர். ஷெரிடன் கல்லூரியின் பிராந்திய கவுன்சிலர் என்ற முறையில், இந்த முதலீட்டை ஆதரிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்; இது, வேலை வாய்ப்பளிப்பவர்களுக்கு தேவையான திறமையைக் கொடுக்க வல்ல தரமான பள்ளிக் கல்விக்கு அடுத்த நிலைக் கல்விக்கான அணுகலை மேம்படுத்த உதவும், அதே நேரத்தில் சமூகத்தின் சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்ய உதவுகிறது.

*- மார்ட்டின் மெடுய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் கனடாவின் விரைவாக வளர்ந்து வருகின்றதும் இளையதுமான சமூகங்களில் ஒன்றாகும், மேலும் வாய்ப்புகளின் நகரமாக இருந்தபடி, எங்கள் குடியிருப்பாளர்களுக்கு பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் எதிர்கால சுகாதாரத் தேவைகளுக்குத் தயாராக இருப்பதற்கும் நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். ஷெரிடன் கல்லூரியின் ஆரோக்கியமான சமூகங்களுக்கான புதிய மையத்திற்காக செய்யப்படும் இந்த முதலீடானது ப்ராம்ப்ட்டன் நகரில் மருத்துவ நிபுணர்களுக்கான தேவையை அதிகரிக்கவும், குடியிருப்பாளர்களுக்கு உள்ளூர் கல்வி வாய்ப்புகளை வழங்கவும் உதவும்.”

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டனில் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலை விருப்பத்தெரிவுகளை -குறிப்பாக நாள்பட்ட நோய்களுக்கு தீர்வு காணுவதில் சமூகத்தின் முக்கியமான தேவைகளின் மீது கவனம் செலுத்துவதன் மூலம்- அதிகரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பீல் குடியிருப்பாளர்களில் பாதி மக்கள், நோய்கண்டறியப்பட்ட நாள்பட்ட ஒரு நோயையாவது கொண்டுள்ளனர் மற்றும் ப்ராம்ப்ட்டனின் மக்கள்தொகையில் 73 சதவீதம் பேர் தெரியவந்த சிறுபான்மையினர் ஆவர், மற்றும் கலாச்சார ரீதியாக திறமையான கவனிப்புக்கான அணுகல் இல்லாதவர்கள் ஆவர். இந்த சமூகத்திற்கு நாள்பட்ட நோய் மேலாண்மை மையம் தேவை; இது நீரிழிவு, இருதய நோய் மற்றும் பிற நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முக்கியமான முன் கூட்டிய தடுப்பு மற்றும் மக்களை அவசர அறைகளுக்குத் தள்ளுகின்ற மேலாண்மைத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். ப்ராம்ப்ட்டனில் குறைந்தது 700 புதிய போஸ்ட் செகண்டரி ஹெல்த் கேர் இருக்கைகளை வழங்குவதன் மூலம், பீல் பிராந்தியத்தில்

உள்ளூரிலேயே உயர் பயிற்சி பெற்ற சுகாதாரப் பாதுகாப்பு நிபுணர்களைக் கொண்டிருக்க உதவுகிறோம்."

*- ஜெனெட் மோர்ரிஸன், தலைவர் மற்றும் துணை வேந்தர், ஷெரடன் கல்லூரி*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca